1974 சனவரி 24]

குற்றவாளி உரிமைதார் நடேசன் நாடார் மீதும், ஏஜண்ட் இசக்கி முத்துக் கோனார் மீதும் 9—11—1973-ல் நாங்குநேரி துணை நீதிபதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இசக்கி முத்துக் கோனார் பெயிலில் விடப்பட்டுள்ளார். நடேசன் தலை மறைவாகிவிட்டார். நடேசனைக் கைதுசெய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வழக்கு விசாரணைக்குப் பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இறந்துபோன எட்டு குடும்பத் தாரும் ஏழைகள். அவர்களுடைய குடும்பத்தாருக்கு அரசாங்கத் தரப்பிலிருந்து உதவி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு குறிப்பு அரசாங்கத்திடம் இல்லை.

Prices of pesticides

* 140 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken by the Government to reduce the price of pesticides in this State?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வேளாண்மைத் துறை விவசாயக் கிடங்குகளில் பூச்சிகொல்லி மருந்து லாபம் அற்ற விலையில் விற்கப்பட்டு வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி : இப்போது இருக்கக்கூடிய பிரச் சினை போதுமான மருந்து கிடைக்கவில்லை என்பது. முன்பு சர்க்கார் தரப்பில் அக்ரோ இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் மூலம் மருந்துகளுக்கு ஏஜன்சி எடுத்து இப்போது கைவிட்டு விட்டார் கள். விவசாயிகளுக்குத் தேவையான மருந்துகளை வாங்கி பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகக் கொடுப்பதற்கு விவசாயி களுக்குக் குறுகிய காலக் கடன் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அக்ரிகல்சுரல் டெப் போவில், எந்த ஊரில் மருந்துகள் இல்லையென்று தெரிகிறதோ, உடனே மேற்கொண்டு பூச்சி மருந்துகள் அனுப்பப்படுகின்றன. குறிப்பாக பி.எச்.சி. என்ற மருந்துதான் விவசாயத் துறையி னரால் ஊக்கப்படுத்தப்படுகிறது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பி.எச்.சி. மருந்தை விரும்பி வாங்குகிறார்கள். அக்ரோ

இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷனே இந்த மருந்தை எல்லா டெப்போ களுக்கும் கொடுத்து வருகிறார்கள். எங்காவது தட்டுப்பாடு இருக்கிறது என்று தெரிவித்தால் உடனே தட்டுப்பாட்டை நீக்க வழி செய்யப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : பாலிடால், என்ட்ரின், மாலதியான் போன்ற மருந்துகள் எந்த யூனியன்களிலும் இல்லாமல் விவசாயி கள் பருத்திக்கு மருந்து அடிக்க வழி இல்லாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மருந்தை ஏன் அரசாங்கம் இறக்குமதி செய்யவில்லை? வாங்கி யூனியன்கள் மூலமாக விவசாயிகளுக்கு ஏன் கொடுக்கவில்லை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : என்டாரின், பாலிடால், மாலதியான் போன்ற மருந்துகள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுபவை. பி.எச்.சி. நம்முடைய மாநிலத் தில் உற்பத்தி செய்யப்படுகிறது. D.D.I. மகாராஷ்டிர மாநிலத்தில் உற்பத்தி ஆகிறது. என்டாரின் தட்டுப்பாடு வந்த உடனேயே மத்திய அரசுக்குச் சொல்லி ஏறத்தாழ இறக்குமதியில் 30 சதவிகிதத்தை, மூன்றில் ஒரு பங்கு தமிழ் நாட்டுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு வாங்கி கோவை மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டது. இதைப் பற்றி விசாரித்தால் நன்றாகத் தெரியும். பருத்தி உற்பத்தி எங்கும் பூச்சியால் குறைந்துவிட வில்லை.

திரு. சோ. அழகர்சாமி : பி.எச்.சி. தமிழ்நாட்டிலேயே உற்பத் தியாகிறது என்று சொன்னார்கள். அதை முன்கூட்டியே கொடுத்தால் நன்றாக இருக்கும். பூச்சி மருந்து விலை அதிகமாக ஏறிவிட்டது. மத்திய சர்க்கார் மானியத்தை நிறுத்திவிட்ட தால் மாநில சர்க்கார் மானியம் கொடுத்து உதவலாம். ஊராட்சி மூலமாக விற்பனையாகாமல் வேறு கடைகளுக்குச் சென்று விற்பனையாகக் கூடிய நிலைமை இருக்கிறது. இதைத் தடுக்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு மருந்துகளைக் கொடுத்து அதிலே வெளி விற்பனைக்கு அல்ல என்ற சீலைக் குத்தி விடுவது நல்லது. அந்த ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய முன்வருமா ? மேலும் . . . (மணி அடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே நேரத்தில் எத்தனை கேள்விகள் ?

1974 சனவரி 24]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பி.எச்.சி. 10 எங்கு கிடைக்கவில்லை என்று சொன்னாலும் உடனடியாக அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யத் தயாராக இருக்கிறேன். இங்கிருந்து வெளிக் கடைகளுக்கு எடுத்துச் சென்று விற்கப்படுகிறது என்ற புகார் வந்தவுடன் விவசாயிகளிடத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டு இந்த மருந்துகளை விற்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இப்படிப்பட்ட குறைகள் அதிகமாக இல்லை.

திரு. முனு ஆதி : பி.எச்.சி. 10 பூச்சி மருந்து ஒன்றியத்தி லிருந்து தனிப்பட்ட வியாபாரிகளுக்குப் போய்விடுகிறது. 16 ரூபாயாக இருந்த அந்த மருந்தின் விலை இந்த ஆண்டு 26 ரூபா யாக ஆகியிருக்கிறது. இதற்கும் மத்திய சர்க்கார் மீது பழி போடுகிறார்களா? அல்லது மாநில சர்க்கார்தான் பொறுப்பா? 17--17—17 காம்ப்ளெக்ஸ் 180 ரூபாய் விற்கப்படுகிறது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பூச்சி கொல்லி மருந்தைப் பற்றி மட்டும் கேளுங்கள். உரத்திற்குப் போகாதீர்கள்.

திரு. முனு ஆதி : என் இந்த விலை உயர்வு?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த வினா பூச்சி கொல்லி மருந்தைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன 17—17—17 காம்ப்ளெக்ஸ் என்பது உரம். உரம் வேறு, பூச்சி கொல்லி மருந்து வேறு. பி.எச்.சி. 10 வேளாண்மைத் துறையினரால் வேளாண்மைக் கிடங்கில் 481 ரூபாய்க்கு விற்கப் படுகிறது. இந்த மருந்தை வெளிக் கடைகளில் விற்பதற்கு எந்த விதத் தடையும் இல்லை. வியாபாரிகள் 650 ரூபாய்க்கு விற்றுக் கொண்டு வருகிறார்கள். விவசாயிகள் வெளிக் கடை களுக்குப் போகத் தேவையில்லை. தேவையான அளவு பூச்சி கொல்லி மருந்தை வேளாண்மைத் துறை கிடங்குகளிலேயே பெற்றுக் கொள்ளலாம்.